# போலீஸ் பார்வை

POLICE PARVAI

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-11 • Volume-11 • இதழ்-5 • Issue-5 • மார்ச்-2026 • March -2026 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV E_Book: www.policeparvai.com



## சீருடை மாற்றம் - ஒரு மைல் கல்

## ம(றை)றக்கப்பட்ட வரலாறு பத்மாசனி அம்மாள்



## தூக்கமின்மைக்கு தீர்வு கண்டு உடல் ஆரோக்கியம் பெற..



## சிறப்பாக செயல்பட்ட காவலர்களை பாராட்டிய காவல் ஆணையர் திரு.தேஷ்முக் சேகர் சஞ்சய் IPS



போகர் வருகையும் கலியுக ரகசியங்களும்..



www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...



மார்ச் மாத கிரக நிலைகள்: ஒரு பார்வை




### போலீஸ் பார்வை இதழின் 10–ம் ஆண்டு விழாவை முன்னிட்டு

# சென்னையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி

### அமைந்தகரை சரக போக்குவரத்து காவல் ஆய்வாளர் திரு.கிருஷ்ணகுமார் தொடங்கி வைத்தார்







போலீஸ் பார்வை இதழின் 10–ம் ஆண்டு விழாவை முன்னிட்டு சென்னை அரும்பாக்கம் சாலையில் ‘போலீஸ் பார்வை’ குழுமம் சார்பாக சாலை பாதுகாப்பு மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

பேரணியை சென்னை பெருநகர காவல் அமைந்தகரை சரக போக்குவரத்து காவல் ஆய்வாளர் திரு.கிருஷ்ணகுமார் தொடங்கி வைத்தார். பேரணியில் ஹெல்மெட் அணியாமல் இருசக்கர வாகனத்தில் வந்தவர்களுக்கு இலவசமாக ஹெல்மெட் அணிவித்து சாலை விபத்து பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் ஆசிரியர் டாக்டர் என்.பால கிருஷ்ணன், முதன்மை ஆசிரியர்கள் எம்.கண் ணன், கே.டி.சிவகுமார், இணை ஆசிரியர் ரவிச்சந்திரன், துணை ஆசிரியர் என்.இளங் கோவன், இணை ஆசிரியர் கே.கே.ஞானேஸ் வரன், தலைமை நிருபர்கள் எஸ்.வேல்முருகன், கே.பாபு, நிருபர்கள் ஹரிஹரன், செயத் முகமதுமீரான், வி.முருகேசன், சதீஷ், சந்திர சேகரன், கலைவாணன் ஆகியோர் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி, வாகன ஓட்டிகளிடம் துண்டு பிரசுரங் களை வழங்கினர். நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக விவசாயி பட நடிகர் திருச்சி திரு.ரமேஷ் அவர்கள் எமதர்மன் வேடமணிந்து ‘தலைக் கவசம் உயிர்க் கவசம்’ என முழங்கியபடி துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார் என்பது குறிப்பிடதக்கது.

# போலீஸ் பார்வை

மார்ச் 2026 மலர் 11 இதழ் 5



**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் **Dr.N.பாலகிருஷ்ணன்**

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், U.மதனகோபால், K.மனோஹரன், K.K.ஞானேஸ்வரன்

International Legal advisor : **Ramachandran Saravanan B.A.,LLB., D.L.L..,LLM**

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L., S.ரவிச்சந்திரன் M.A., B.L, K.அருணாச்சலம் B.Com., LLB

**சிறப்பு ஆலோசகர்** : S.செயத்அலி B.Sc., LLB.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், K.பாபு I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன், J.ஜெயவேல்முருகன், N.முரளிதரன்

**சிறப்பு நிருபர்கள்** : V.Vivek Bomb, P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, R.மணிமாறன், M.வெங்கடேசலு, குரு.சரவணன், P.மணிமாறன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், G.நந்தகுமார், S.ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமன்ட், S.அன்வர்தீன்,L.லூயில்பெர்ணான்டஸ், P.ராஜராமகிருஷ்ணன்,R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம்,M.ரவி,S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், S.ரவிச்சந்திரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S.ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்(எ)பாலாஜி, K.S.அசோகன், C.பரமசிவம், R.செந்தில்குமார்,A.சரவணன், S.பாலாஜி, S.நவநீத கிருஷ்ணன், K.செல்வ நயினார், K.விமல்ராஜ், R.ஜோதிபாசு, K.சதீஷ்குமார், R.நந்தகுமார், J.மணிகண்டன், S.வெங்கடேஷ், V.சுகுமாரன், K.பில்லர், R.சங்கர், Dr.J.காந்தியப்பன், S.ஜெயந்தி செல்வம், V.வேல்முருகன், S.தினேஷ்குமார், C.A.செந்தில்நாதன், S.பாஜி, G.முகமது அன்சாரி, முகமது தாவூத் ஹுசேன்



**அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise, No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099. Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com, Website.www.policeparvai.com**



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only


● தலையங்கம்

# 100% வாக்களிப்போம்

## வாக்குரிமை விற்காமல் நாட்டை வளம்பெற செய்வோம்

ஒரு விரலை உயர்த்துவோம்! அதன் பெருமையை உணர்த்துவோம்!! வருகின்ற 2026, ஏப்ரல் 23, ஆம் தேதி நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலில் 100% வாக்களிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. தமிழகத்தில் பல அரசியல் கட்சிகள் தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகின்ற சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ள வலுவான கூட்டணிகளை அமைத்து வெற்றிவாகை சூட தீவிர பணியாற்றி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக புதிய வாக்காளர்கள் கணிசமாக வருகின்ற சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிக்க உள்ளனர் 100% வாக்களிப்பது நமது தலையாயக் கடமை. பொதுவாக வாக்காளர்கள் அனைவரும் நன்றாக சிந்தித்து வாக்கு விலையாகாமல் வாக்களிக்க முன்வர வேண்டும். ஏனென்றால் நாம் தேர்ந்தெடுக்கக்கூடிய பிரதிநிதிகள் தேர்தல் களத்தில் பணத்தை செலவிட்டு சுயநல பாங்கோடு வெற்றி பெறக்கூடிய வேட்பாளராக இருக்கும் பட்சத்தில் அவர்கள் தேர்தல் களத்தை ஒரு வியாபாரக் களமாக லாப நோக்கோடு கையாளுபவர்கள் என நாம் உணர்ந்து விழிப்புணர்வுடன் வாக்களிக்க வேண்டும். கட்சி பாகுபாடு இன்றி நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை செய்யக்கூடிய நாட்டின் வளர்ச்சியும் நாட்டு மக்களின் வளர்ச்சியும் கருத்தில் கொண்டு பொதுநல பாங்கோடு செயல்படக்கூடிய மக்கள் பிரதிநிதிகளை நாம் தேர்ந்தெடுப்பது மிக முக்கியமான ஒன்றாகும். வாக்குகளை விலைக்கு விற்பது நம்மை விற்று அடிமைகளாக வாழ்வதற்கு சமம். ஆகையால் இந்த தேர்தலில் வாக்கை விலை கொடுத்து வாங்க நினைக்கும் வேட்பாளர்களை புறக்கணித்து 100% எந்த எதிர்பார்ப்பும் இன்றி மக்கள் சேவை பணியாற்றக்கூடிய வேட்பாளர்களை தேர்ந்தெடுக்க மக்கள் விழிப்புணர்வுடன் முன் வர வேண்டும் அப்போதுதான் நாடும் நாட்டு மக்களும் நலம் பெறுவார்கள். வாக்குச்சாவடி அமைந்துள்ள இடம் மற்றும் எவ்வாறு வாக்களிக்கிறோம் என்பன அடங்கிய அனைத்து சந்தேகங்க ளையும் தெளிவுபடுத்த தேர்தல் ஆணையம் அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்வார்கள். அதைபின்பற்றி நேர்மையாக உணர்வுபூர்வமாக 100% நம் வாக்குரிமைகளை செலுத்த வேண்டும் அதுவே வாக்காளர்களாகிய நமது தலையாயக் கடமை என்பதை உணர்வோம்.

**ஆசிரியர்**

### இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...

'போலீஸ் பார்வை' மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.




# சீருடை மாற்றம் - ஒரு மைல் கல்

**1976**–ம் ஆண்டு மார்ச் 11–ஆம் தேதி, தமிழகக் காவல்துறையின் தோற்றத்தில் ஒரு மிகப்பெரிய வரலாற்று மாற்றம் நிகழ்ந்தது.

அன்றுதான் காவலர்களின் சீருடையில் அதுவரை நடைமுறையில் இருந்த அரைக்கால் சட்டையிலிருந்து (Half Pants) முழுக்கால் சட்டைக்கு (Full Trousers) மாற அரசு அதிகாரப்பூர்வமாக உத்தரவிட்டது. காலனித்துவ காலத்தின் அடையாளமாகத் தொடர்ந்த அரைக்கால் சட்டை முறையை மாற்றி, காவலர்களுக்கு நவீன தோற்றத்தையும் கம்பீரத்தையும் அளிக்கும் வகையில் இந்தச் சீருடை மாற்றம் கொண்டு வரப்பட்டது. பொதுமக்களிடையே காவல்துறைக்கான மரியாதையை உயர்த்தவும், பணியின் போது அவர்களுக்கு அதிக சௌகரியத்தை ஏற்படுத்தவும் எடுக்கப்பட்ட இந்த முடிவு, தமிழகக் காவல் துறையின் நவீனமயமாக்கலில் ஒரு முக்கிய மைல்கல்லாக இன்றும் கருதப்படுகிறது.

**நிருபர்: LNK.சந்தன், சென்னை**

# SP திரு.S.ஜெயக்குமார் IPS அவர்கள் வாழ்த்து..



மேற்கு வங்காளம் ஹீக்கியில் 46–வது தேசிய சப் ஜூனியர் வாலிபால் சாம்பியன்ஷிப் போட்டியில், கடலூர் மாவட்டம் சங்கொலிகுப்பம் கிராமத்தை சார்ந்த எம். ரஞ்சித் என்பவர் இந்திய விளையாட்டு ஆணையம் அணி சார்பில் பங்கேற்று விளையாடினார். ஆண்கள் பிரிவில் 2–ம் இடத்தை பிடித்து வெள்ளி பதக்கம் வென்றார். வெள்ளிப் பதக்கம் வென்ற ரஞ்சித்தை கடலூர் மாவட்ட SP திரு.S. ஜெயக்குமார் IPS அவர்கள் பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

**சிறப்பு நிருபர்: P.முத்துகுமரன், கடலூர்**



## சுதந்திரபோராட்டதியாகி

# வீராங்கனை பத்மாசனி அம்மாள்

ஸ்ரீவில்லிபுத்தூர் சுந்தராஜ ஐயங்கார், தன் மகள் பத்மாசனியை 1900களிலேயே பள்ளிக்கு அனுப்பினார். அந்தப் பெண் எழுத்தறிவு பெற்றாள். மதுரை தமிழ்ப் பண்டிட் ஸ்ரீனிவாச வரதனை மணந்தார்.

கல்வியறிவு இருந்ததால் பாரதியின் பாடல்களைப் பாடத்துவங்கினார் பத்மாசனி. கணவனும் மனைவியுமாகச் சேர்ந்து பாரதியின் பாடல்களைத் தெருவெல்லாம் பாடினர். கணவன் கள்ளுக்கடை மறியல், தேசபக்தன் இதழில் எழுத்தர் என்று தேச சேவை செய்ய, பிரிட்டிஷ் அரசு அவரை கைது செய்கிறது. பத்மாசனி அம்மாள் தன் கணவருக்கு நெற்றித் திலகம் இட்டு சிறை செல்ல வழியனுப்புகிறார்.

கணவன் சிறைக்குச் சென்றால் என்ன என்று தானே களத்தில் இறங்குகிறார் பத்மாசனி. காந்தியடிகளின் ஆணைப்படி அன்னிய நாட்டுத் துணிகள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடுகிறார் பத்மாசனி. அனேகமாக விடுதலைப் போருக்காகச் சிறை சென்ற முதல் தமிழ்ப் பெண்ணாக இருக்கலாம் என்று தெரிகிறது. ஊர்ஜிதம் இல்லை.

கணவனும் மனைவியுமாக தேச சேவை செய்த பத்மாசனிக்கு 2 ஆண் குழந்தைகள் பிறந்து ஓராண்டுக்குள் மரிக்கின்றன. தேசம் தேசம் என்று ஓடினால், குழந்தைகளை யார் பர்த்துக்கொள்வது ?

மூன்றாவதாகக் கருவுரும் பத்மாசனி, கதர் போராட்டத்தில் கைதாகிச் சிறை செல்கிறார். கரு கலைகிறது. நான்காம் முறை கர்ப்பம் தரிக்கும் பத்மாசனி, சுப்பிரமணிய சிவாவின் காவிரி நடைப் பயணப் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார். சிவாவின் பாப்பாரப்பட்டியில் குழந்தை பிறந்து இறக்கிறது.

எப்போதுமே தேச சேவை என்கிற எண்ணத்திலேயே இருக்கும் பத்மாசனி அம்மாள், உப்பு சத்தியாக்கிரஹம், கதர் பிரச்சாரம் என்று பலவற்றுக்காகவும் சிறையில் இருந்திருக்கிறார்.

வசதியானவரான பத்மாசனி அம்மாள், மூணாம்பட்டி என்னும் இடத்தில் 'பாரதி ஆசிரமம்' அமைக்க 10 ஏக்கர் நிலம் தானம் கொடுகிறார். கணவர் ஸ்ரீனிவாச வரதன், பாரதியார் பத்திரிக்கை நடத்த தேவையான போதெல்லாம் பண உதவி செய்துவந்தார் என்பது உபரித் தகவல்.

பத்மாசனி அம்மாள் 'சகோதரிகள் சங்கம்' என்று ஓர் அமைப்பை ஏற்படுத்தி, இன்னும் சில பெண்களுடன் சேர்ந்து, கதர் பிரச்சாரம், அன்னிய துணி பகிஷ்கரிப்பு, பாரதியின் பாடல்களைப் பிரபலப்படுத்துவது என்று மதுரையைக் கலக்கியுள்ளார்.

பெல்காம் காங்கிரஸ் மாநாட்டிற்குத் தமிழகத்தின் சார்பாகச் சென்று வீர உரை ஆற்றியுள்ள பத்மாசனி அம்மாள், மானாமதுரையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பள்ளி நிறுவியுள்ளார்.


சென்னையில் கொடுங்கோலன் நீல் சிலை அகற்றும் போராட்டத்திற்கு நிதி வேண்டும் என்கிற நிலை வந்த போது, தனது நகைகளை விற்றுப் பணம் கொடுத்த பத்மாசனி அம்மாள், 1936–ல் ஆஸ்துமா நோயால் காலமானர்.

நீல் சிலை நீக்கம், பார்ப்பன சதி என்று அன்றைய ஜஸ்டிஸ் கட்சி அரசு அறிக்கை விட்டு, தனது ஆங்கிலேய விசுவாசத்தைக் காட்டிக்கொண்டது.

மதுரை ஹேப்ரங்கால் பள்ளிக்கு அருகில் 'பத்மாசனி பார்க்' என்று ஒன்று 70–களில் இருந்தது. இன்று பழைய மர, இரும்புச் சாமான்கள் போட்டுவைத்துள்ளார்கள் என்று இணையத்தில் தெரிகிறது.

மற(றை)க்கப்பட்ட வரலாறு...



# மதுரை மாநகர காவல் கரங்கள் அமைப்பின் மூலம் மீட்கப்பட்ட நபர் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டார்

மதுரை மாநகர காவல் ஆணையர் அவர்களுக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில், காவல் ஆணையர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பெயரில், மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனை அருகில், உடல்நலம் பாதிக் கப்பட்ட நிலையில் இருந்த மாரியம்மாள் என்கிற 66 வயது மதிக்கத்தக்க முதியவரை குழந்தைகள் மற்றும் ஆட்கடத்தல் தடுப்பு பிரிவு (AHTU) காவல் ஆய்வாளர் அவர்கள் தலைமையிலான “காவல் கரங்கள்” அமைப்பைச் சேர்ந்த காவலர்கள் மீட்டனர்.

அவருக்கு முதலுதவி அளித்து, மேற்படி, மருத்துவ சிகிச்சை மற்றும் பாதுகாப்பிற்காக நாகதீர்த்தம் பகுதியில் உள்ள அக்சயா டிரஸ்ட்டில் சேர்த்திருந்தனர்.

இந்நிலையில் சிகிச்சைக்கு பின்பு பாதிக்கப்பட்ட நபர் அவருடைய முகவரியை தெரிவிக்க காவல்கரங்கள் அமைப்பினரின் கடும் முயற்ச்சியால் ராஜபாளையம் அருகே கிழவி குளத்திலுள்ள அவருடைய மகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு குடும்பத்தாருடன் மாநகர காவல் கூடுதல் துணை ஆணையர் அவர்கள் முன்னிலையில் சேர்த்து ஒப்படைக்கப்பட்டார். மாரியம்மாள் குடும்பத்தினரை விட்டு 3 ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்ததாக குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இதற்கு பெரிதும் உதவியாக இருந்த மதுரை மாநகர காவல் ஆணையர் முனைவர் திரு.ஜெ.லோகநாதன் IPS அவர்களுக்கும், காவல் கரங்கள் அமைப்பை சேர்ந்த காவல்துறையினருக்கும் முதியவரின் குடும்பத்தினர் தங்களது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தி நன்றிகளை தெரிவித்தனர்.

மதுரை மாநகர காவல் கரங்கள் அமைப்பின் இலவச தொலைபேசி எண்: 1800–8892–098, 6369860806.

சிறப்பு நிருபர்: J.பீமராஜ், மதுரை.



**நம்மை நாம் உணர்ந்தால் நம் வாழ்க்கையில் எத்தனை தடுமாற்றம் வந்தாலும், நமது பயணம் எப்போதும் தடம் மாறாது..!**

ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்















## போக்சோ வழக்கில் குற்றவாளிக்கு தூக்குத்தண்டனை பெற்று தந்த

# திருநெல்வேலி காவல் அதிகாரிகளை பாராட்டிய காவல் ஆணையர் திரு.தேஷ்முக் சேகர் சஞ்சய் IPS

போக்சோ வழக்கில் சரித்திர பதிவேடு குற்றவாளிக்கு தூக்குத்தண்டனை பெற்று தந்த காவல் துறையினரை நேரில் அழைத்து பாராட்டிய திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் திரு.தேஷ்முக் சேகர் சஞ்சய் IPS.

போக்சோ வழக்கில் சரித்திர பதிவேடு குற்றவாளிக்கு தூக்குத்தண்டனை பெற்று தந்த காவல் உதவி ஆணையர் திரு.சுரேஷ் (பாளையம்கோட்டை சரகம்), காவல் ஆய்வாளர் திருமதி.நாககுமாரி, காவல் உதவி ஆய்வாளர் திருமதி.வள்ளியம்மாள், காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திருமதி.ரேணுகா, திருமதி. ஜெயந்தி, திருமதி.சிலுவை ராணி மற்றும் தலைமை காவலர் திருமதி .மெர்லின் குளோரி ஆகியோரை மாநகர காவல் ஆணையர் அவர்கள் நேரில் அழைத்து சிறப்பாக பணிபுரிந்தமைக்கு நற்சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார்கள்.

நிருபர்: R.ஜோதிபாசு, திருநெல்வேலி



## விழுப்புரம் மாவட்ட காவல்துறை சார்பில்

# 100% வாக்குப் பதிவை வலியுறுத்தி கொடி அணிவகுப்பு

விழுப்புரம் மாவட்ட காவல்துறை சார்பில் 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி திண்டிவனம் காவல் உட்கோட்டத்தில் கொடி அணிவகுப்பு பேரணி நடத்தப்பட்டது. நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல்- 2026–ல் 100% வாக்கு பதிவை வலியுறுத்தியும், பொதுமக்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் ஜனநாயக கடமையை நிறைவேற்றவும் விழுப்புரம் மாவட்ட காவல்துறை சார்பாக, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் படி, 13.03.2026 காலை கொடி அணிவகுப்பு பேரணி நடைபெற்றது.

இந்த அணிவகுப்பு திண்டிவனம் காவல் நிலையத்தில் இருந்து நேரு வீதி, காந்தி சிலை, தீர்த்த குளம், ஆதித்யா பள்ளி வழியாக சென்று மரக்காணம் ரோட்டில் உள்ள கிடங்கள் II வீதி வழியாக சென்று திண்டிவனம் காவல் நிலையத்தில் கொடி அணிவகுப்பு முடிவடைந்தது.

அணிவகுப்பில் திண்டிவனம் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திரு.பிரகாஷ், ஆயுதப்படை துணை காவல் கண்காணிப்பாளர் திரு.ஞானவேல், காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், காவல் ஆளிநர்கள் மற்றும் மத்திய எல்லை பாதுகாப்பு படையினர் என 175–க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

**நிருபர்: R.ராமநாதன், விழுப்புரம்**





# அரியலூர் SP திரு.விஷ்வேஷ் பா.சாஸ்திரி IPS திடீர் ஆய்வு

அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.விஷ்வேஷ் பா.சாஸ்திரி IPS அவர்கள் 12.3.2026 அன்று இரவு அரியலூர் அரசு மருத்துவமனையில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த சேவை மையம் (One Stop Centre) மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இயங்கி வரும் புற காவல் நிலையம் ஆகியவற்றை திடீர் ஆய்வு மேற்கொண்டு பராமரிக்கப்படும் பதிவேடுகளை பார்வையிட்டார்கள்.

**நிருபர்: R.தங்க பாண்டியன், அரியலூர்**

நாகர்கோவில் விரைவு மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்ற

# பேரூராட்சி முன்னாள் துணைத் தலைவர் கொலை வழக்கில் 6 பேருக்கு ஆயுள் தண்டனை

## வழக்கில் சிறப்பாக செயல்பட்ட காவல் அதிகாரிகளை பாராட்டிய கன்னியாகுமரி மாவட்ட SP டாக்டர் R.ஸ்டாலின் IPS அவர்கள்

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் R.ஸ்டாலின் IPS அவர்கள் நீதிமன்றத்தில் குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கி தருவதில் முன்னுரிமை குறித்து செயல்பட்டு வருகிறார்.

நீதிமன்ற வழக்கு விசாரணைகளை தொடர்ந்து கண்காணித்து அவ்வப்போது புலன் விசாரணை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி வருகிறார்கள்.



கன்னியாகுமரி மாவட்டம் அஞ்சுகிராமம் பேரூராட்சி முன்னாள் துணைத் தலைவர் தாசன் @ இயேசு அமிலதாசன் பொது குடிநீர் குழாயை பிச்சைக்குடியிருப்பு மீன் சந்தை பகுதியில் இருந்து மாற்றிய விவகாரத்தில் ஏற்பட்ட முன் தகராறின் காரணமாக, அவர், அவரது சகோதரி மற்றும் தாயார் கடைக்கு சென்றுகொண்டிருந்த போது, குற்றவாளிகள் ஆயுதங்களுடன் கூடி வழிமறித்து தாக்கினர்.

அதில் கம்பி மற்றும் அரிவாளால் பல இடங்களில் தாக்கப்பட்டதால், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்த சம்பவம் குறித்து அஞ்சுகிராமம் காவல் நிலையத்தில் குற்ற எண் 468/2011 U/S 147, 148, 120(b), 341, 323, 302 IPC இன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கின் விசாரணை நாகர்கோவில் விரைவு மகிளா நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

இந்நிலையில் நீதிபதி இக்குற்றத்தில் ஈடுபட்ட திருநெல்வேலி மாவட்டம் ராஜகிருஷ்ணபுரத்தை சேர்ந்த ரவிமணி என்பவரின் மனைவி ரஞ்சிதம், மகன்களான ஜெகன், ஸ்ரீனிவாசன், சங்கர் மற்றும் அதேபகுதியை சேர்ந்த பாண்டியன் என்பவரின் மகன் பாக்யராஜ், அழகப்பபுரம் மங்கம்மாள் சாலை பகுதியை சேர்ந்த நவமணி ஆகியோருக்கு ஆயுள் தண்டனை மற்றும் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

நீதிமன்ற வழக்கு விசாரணை, சாட்சிகள் விசாரணை ஆகியவற்றில் சிறப்பாக செயல்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கித் தர காரணமாக இருந்த இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள், அரசு குற்ற வழக்கறிஞர், நீதிமன்ற காவலர், இந்த வழக்கின் நீதிமன்ற விசாரணையை முறையாக கண்காணித்த கன்னியாகுமரி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர், அஞ்சுகிராமம் காவல் நிலைய ஆய்வாளர் ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் R.ஸ்டாலின் IPS அவர்கள் வெகுவாக பாராட்டினார்.

**தலைமை நிருபர்:J.ஜெயவேல் முருகன், கன்னியாகுமரி**




மார்ச் 2026 கீரக நிலை
குரு
துர்பர்
சனீ
சந்திரன்
செவ்வாய்
ருக்
ரபத்
கேது

## மேஷ ராசி அன்பர்களே!




தைரிய வீரிய ஸ்தானத்தில் லாப ஸ்தானத்தில் சனி, ராகு – என கிரக நிலைகள் உள்ளன. எடுத்த முடிவில் பின் வாங்காத அதே வேளையில் கருத்தும் கண்ணுமாக இருக்கும் மேஷ ராசி அன்பர்களே இந்த மாதம் மற்றவர்களுடன் இருந்த பகை மாறும். முடங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பிடிக்கும். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு கை கொடுப்பார்கள். மனதில் இருந்து வந்த சஞ்சல மனநிலையில் மாற்றம் இருக்கும். தரும சிந்தனை உண்டாகும். பண நெருக்கடி குறையும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். பழைய பாக்கிகள் வசூல் செய்வதில் வேகம் இருக்கும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். கணவன் மனைவிக்கு இடையே இருந்த குழப்பங்கள் நீங்கும். பெண்களுக்கு பணத் தேவை பூர்த்தியாகும். கலைத்துறையினருக்கு மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். சூரியன் சஞ்சாரத்தால் முன் கோபம் ஏற்பட்டு அதனால் வீண் தகராறு ஏற்படலாம். நிதானமாக செயல்படுவது நல்லது.

வணங்க வேண்டிய தெய்வம்: துர்க்கை
ஸ்லோகம்: துக்க நிவாரண அஷ்டகம்
பரிகாரம்: அம்பாளுக்கு எலுமிச்சம் பழ மாலை
சந்த்ராஷ்டமம்:– மாசி 25 (09/03/26) திங்கள் கிழமை அதிகாலை 10.08மணி முதல் 27–ம் தேதி (11/03/26) புதன்கிழமை இரவு 9.49 மணி வரை

## ரிஷப ராசி அன்பர்களே!




தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் ஸ்தானத்தில் தொழில் ஸ்தானத்தில் கிரக நிலைகள் உள்ளன.

நேரத்தை உயிருக்குச் சமமாக மதிக்கும் ரிஷப ராசி அன்பர்களே நீங்கள் தனியாக இருக்க விரும்பாதவர்கள். இந்த மாதம் எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் இருந்த தடுமாற்றம் நீங்கும். மற்றவர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை உண்டாகி அவர்களுடன் பகை ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். புதிய ஆர்டர்கள் பெறுவதில் தடுமாற்றம் உண்டாகும். எந்த வேலையை முதலில் கவனிப்பது என்று குழப்பம் வரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் டென்ஷனுடன் காணப்படுவார்கள். கணவன், மனைவிக்கு இடையே கருத்து வேற்றுமை ஏற்படும். சிற்றின்ப சுகம் குறையும். பிள்ளைகளுடன் அனுசரித்து செல்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும் பயணங்களின் போதும் கூடுதல் கவனம் தேவை. கலைத் துறையினருக்கு எந்த விவகாரத்தில் சிக்கினாலும் சாமர்த்தியமாக மற்றவரை முன் நிறுத்திதான் தப்பித்துக் கொள்ள வேண்டி வரும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்க நேரிடும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை ஏற்படும். பாடங்களில் கவனம் செலுத்தி படிப்பது நல்லது.

வணங்க வேண்டிய தெய்வம்: ஸ்ரீரங்கநாதர்
ஸ்லோகம்: சுப்ரபாதம் சொல்லுதல்
பரிகாரம்: அம்பாளுக்கு இலுப்ப விளக்கு ஏற்றுதல்
சந்த்ராஷ்டமம்: மாசி 27 (11/03/26) புதன்கிழமை இரவு 9.50 மணி முதல் 30–ம் தேதி (14/03/26) சனிக்கிழமை காலை 8.45 மணி வரை

## மிதுன ராசி அன்பர்களே!




தைரிய வீரிய ஸ்தானத்தில் பாக்கிய ஸ்தானத்தில் உள்ளது.

நிதானமாக எந்த முடிவையும் எடுக்கும் மிதுன ராசி அன்பர்களே நீங்கள் கொண்ட கொள்கையில் உறுதியாக இருப்பவர்கள். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு, வீண் அலைச்சல் குறையும். எதிர்பார்த்த அதிகாரம் அந்தஸ்து கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். கணவன், மனைவிக்கு இடையில் நெருக்கம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். கையில் காசு புரளும். கலைத்துறையினருக்கு உடன் பணிபுரிபவர்கள் வீண் வாக்குவாதங்களில் ஈடுபடலாம். மற்றவர்களை திருப்தியடையச் செய்யும் வகையில் உங்களது செயல்கள் இருக்கும். வீண் அலைச்சல் ஏற்படலாம். மாணவர்களுக்கு கல்வி பற்றிய பயம் நீங்கும். எதிர்காலம் பற்றிய திட்டம் தோன்றும். ஆசிரியர்களின் உதவி கிடைக்கும்.

வணங்க வேண்டிய தெய்வம்: ஸ்ரீநரசிம்மர்
ஸ்லோகம்: ஸ்ரீநரசிம்மரை அஷ்டகம்
பரிகாரம்: ஸ்ரீநரசிம்மருக்கு இலுப்ப எண்ணெய்
சந்த்ராஷ்டமம்: மாசி 30–ம் தேதி (14/03/26) சனிக்கிழமை காலை 8.46மணி பங்குனி 2–ம் தேதி (16/03/26) திங்கள்கிழமை மாலை 5.35 மணி வரை.

## கடக ராசி அன்பர்களே!




தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் லாப ஸ்தானத்தில் அயன சயன போக ஸ்தானத்தில் உள்ளன

ரத்த சம்பந்த உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கடக ராசி அன்பர்களே நீங்கள் தலைமை தாங்குவதில் வல்லவர்கள். இந்த மாதம் கோபம், வேகம் இருக்கலாம். தொழில் வியாபாரம் தொடர்பான நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். எந்த நெருக்கடிகளையும் சமாளிக்கும் தெம்பு வரும். புது வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் சுமையாக வரும். நிதானம் தேவை. சக ஊழியர்களுடன் சாமர்த்தியமாக பழகி காரிய அனுகூலம் அடைவீர்கள். பிள்ளைகளிடம் கோபமாக பேசாமல் அன்பாக பேசுவது நல்லது. வாகன வசதி உண்டாகும். பெண்களுக்கு அடுத்தவர்களிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும். எதிலும் நிதானம் தேவை. கலைத்துறையினருக்கு முன்னேற்றம் சீரான பாதையில் இருக்கும். மேலிடத்தின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். மாணவர்களுக்கு பதற்றம் கொள்ளாமல் நிதானமாக பாடங்களை படிப்பது நல்லது.

வணங்க வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளியம்மன்
ஸ்லோகம்: லெஷ்மி அஷ்டகம்
பரிகாரம்: ஸ்ரீகாளியம்மனை நெய் தீபம் ஏற்றுதல்
சந்த்ராஷ்டமம்: பங்குனி 2–ம் தேதி (16/03/26) திங்கள் கிழமை மாலை 5.36 மணி முதல் 4–ம் தேதி (18/03/26) புதன் கிழமை இரவு 11.58 மணி வரை

**சிம்ம ராசி அன்பர்களே!**




பஞ்சம ஸ்தானத்தில் தொழில் ஸ்தானத்தில் லாப ஸ்தானத்தில் உள்ளன.

தனது தோரணையால் அனைத்து காரியங்களையும் சாதிக்கும் திறன் கொண்ட சிம்ம ராசி அன்பர்களே நீங்கள் பொறுமையைக் கடைபிடித்தால் அனைத்து காரியங்களிலும் வெற்றிதான். இந்த மாதம் தடைபட்டிருந்த பண வரத்து வந்து சேரும். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது. தொழில் வியாபா ரத்தில் இருப்பவர்கள் கூடுதல் செலவை சந்திக்க நேரிடும். புதிய ஆர்டர்கள் கிடைப்பது வேகமாகும். தேவையான பண உதவி கிடைக்கலாம். உத்தி யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணி காரணமாக உடல் சோர்வு உண்டாகலாம். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனை தீரும். அரசு மூலம் நடக்க வேண்டிய பணிகளில் இருந்த தொய்வு நீங்கும். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் அலட்சியம் காட்டாமல் இருப்பது நல்லது. விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்ளும்போது கவனம் தேவை.

வணங்க வேண்டிய தெய்வம்: சிவபெருமான்
ஸ்லோகம்: சிவ அஷ்டகம் சொல்லுதல்
பரிகாரம்: சிவனுக்கு நெய் தீபம் ஏற்றுதல்
சந்த்ராஷ்டம தினங்கள்: பங்குனி 4–ம் தேதி (18/03/26) புதன்கிழமை இரவு 11.59 மணி 7–ம் தேதி 21/03/26 சனிக்கிழமை அதிகாலை 4.13 மணி வரை

**கன்னி ராசி அன்பர்களே!**




சுக ஸ்தானத்தில் ரண ருண ரோக பாக்கிய ஸ்தானத்தில் தொழில் , அயன சயன போக உள்ளன.

உழைப்பிற்கு முன்னுதாரணமாய் வாழ்ந்து காட்டும் கன்னி ராசி அன்பர்களே நீங்கள் பண விஷயங்களில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இந்த மாதம் பொறுப்புகள் அதிகரிக்கும். தேவையில்லாத வீண் செலவுகள் உண்டாகும். தந்தையின் உடல் நலத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருந்தாலும் முடிவில் லாபம் கிடைக்கும். எதிர்பார்த்த கடன் வசதி கிடைக்கும். புதிய ஆர்டர்கள் வரும். தொழில் வியாபாரத்திற்கு புதியதாக இடம் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உழைப்புக்கு ஏற்ற பலனை அடைவார்கள். நிலுவையில் உள்ள பணம் வரும். புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். பெண்களுக்கு பயணங்கள் செல்ல நேரலாம். உறவினர்களிடம் வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. காரிய தாமதம் ஏற்பட்டாலும் சாதகமான பலன் கிடைக்கும். கலைத்துறையினருக்கு ராசிநாதன் புதனின் சஞ்சாரம் நல்ல திருப்பங்களை ஏற்படுத்தும்.

வணங்க வேண்டிய தெய்வம்: பெருமாள்
ஸ்லோகம்: லெஷ்மி அஷ்டகம்
பரிகாரம்: பெருமாளுக்கு நெய் தீபம்
சந்த்ராஷ்டமம் தினங்கள் : பங்குனி 7–ம் தேதி (21/03/26) சனிக்கிழமை அதிகாலை 4.14 மணி முதல் பங்குனி மாதம் 9–ம் தேதி 23/03/26 திங்கள் கிழமை காலை 7 மணி வரை

**துலா ராசி அன்பர்களே!**




தைரிய வீரிய , பஞ்சம , பாக்கிய , லாப உள்ளன.

அனைவரிடத்திலும் சரிசமமாக நடந்து கொள்ளும் துலா ராசி அன்பர்களே நீங்கள் சிக்கனத்தை கடைபிடிப்பதில் கவனம் செலுத்துவது நன்மையைத் தரும். வாகனம், வீடு ஆகியவற்றால் செலவு ஏற்படும். அடுத்தவர் பிரச்சனைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு வேகமாக நடக்காவிட்டாலும் லாபம் குறையாமல் இருக்கும். புதிய ஆர்டர்கள் கிடைப்பது தாமதப்படும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தடங்கல்கள், கூடுதல் உழைப்பு ஆகியவற்றை சந்திக்க வேண்டி இருக்கும். அக்கம்பக்கத்தினரிடம் அனுசரித்து செல்வது நல்லது. பெண்களுக்கு சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கலைத்துறையினருக்கு சிறப்பான காலகட்டமாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விஷயங்களில் கவனமாக இருப்பது நல்லது. கூடுதல் கவனத்துடன் பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும்.

வணங்க வேண்டிய தெய்வம்:. பெருமாள்
ஸ்லோகம்: லெஷ்மி அஷ்டகம் சொல்லுதல்
பரிகாரம்: பெருமாளுக்கு நெய் தீபம்
சந்த்ராஷ்டமம்: பங்குனி 9–ம் தேதி 23/03/26 திங்கள் கிழமை காலை 7.04 மணி முதல் 11–ம் தேதி 25/03/26 புதன்கிழமை காலை 9.22 மணி வரை

**விருச்சிக ராசி அன்பர்களே!**




தன வாக்கு குடும்ப, சுக களத்திர, தொழில் ஸ்தானத்தில் உள்ளன.

எடுத்த வேலையை கொடுத்த நேரத்தில் செய்யும் திறன் படைத்த விருச்சிக ராசி அன்பர்களே நீங்கள் அவசரத்தை விட்டுவிட்டு நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. திருமண முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் நீங்கும். வியாபார வளர்ச்சி பற்றிய சிந்தனை எழும், எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றமான பலன் காண்பார்கள். பிள்ளைகள் பெருமை சேர்ப்பார்கள். விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் குடும்பத்தினருடன் கலந்து கொள்வீர்கள். பெண்களுக்கு எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். எதிர்பார்த்த காரியங்கள் நல்லபடியாக முடிய கடினமாக பணியாற்ற வேண்டி இருக்கும். வீண் அலைச்சல் உண்டாகலாம். மேல்மட்டத்தில் இருப்பவர்கள் உங்களை ஆலோசனை செய்யாமல் தானாக எதையும் செய்வது உங்களுக்கு மன வருத்தத்தை தரலாம்.

வணங்க வேண்டிய தெய்வம்: முருக பெருமான்
ஸ்லோகம்: கந்த குரு கவசம்
பரிகாரம்: முருக பெருமானுக்கு நெய் தீபம்
சந்த்ராஷ்டமம்: பங்குனி 11–ம் தேதி 25/03/26 புதன்கிழமை காலை 9.23 மணி முதல் 13–ம் தேதி 27/03/26 வெள்ளிக்கிழமை பகல் 12.06 மணி வரை


**தனுசு ராசி அன்பர்களே!**




தைரிய வீரிய ,ரண ருண , களத்திர, பாக்கிய ஸ்தானத்தில் உள்ளன. நேர்மையாகவே அனைத்து காரியங்களையும் சாதித்து கொள்ளும் தனுசு ராசி அன்பர்களே நீங்கள் சோம்பலை ஒதுக்கி விடுவது உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். இந்த மாதம் மன உறுதி அதிகரிக்கும். திறமையான செயல்பாட்டால் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் எதிர்பாராத விருந்தினர் வருகையால் விரும்பத்தகாத வாக்குவாதங்கள் ஏற்படலாம். கலைத்துறையினருக்கு உடன் பணி புரிபவர்களுடன் வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம் கவனம் தேவை. எனவே அனுசரித்து செல்வது நல்லது. எதிலும் முழு கவனத்துடன் ஈடுபடுவது நன்மையை தரும். பண வரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். பண வரத்து அதிகரிக்கும். நண்பர்களால் உதவிகள் கிடைக்க பெறுவீர்கள். புதிய நபர்களின் நட்பும் அதனால் மகிழ்ச்சியும் உண்டாகும். சூரியன் சஞ்சாரத்தால் ஏற்கனவே செய்த ஒரு செயலை நினைத்து வருந்த நேரிடும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விஷயங்கள் தாமதமாக நடக்கும். புதிய நட்புகள் கிடைக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: சித்தர்கள்**
**ஸ்லோகம்: தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்**
**பரிகாரம்: சித்தர்களை வணங்குவது**
**சந்த்ராஷ்டமம்: பங்குனி 13–ம் தேதி 27/03/26 வெள்ளிக்கிழமை பகல் 12.07 மணி முதல் 15–ம் தேதி 29/03/26 ஞாயிற்றுக் கிழமை மாலை 4.05 மணி வரை**

**மகர ராசி அன்பர்களே!**




தன வாக்கு குடும்பம் ,ரண ருண ரோக ,அயன சயன உள்ளன. வாக்கு வாதத்தில் திறமையுடைய அதே வேளையில் மனசாட்சிக்கும் இடம் கொடுத்து நடக்கும் மகர ராசி அன்பர்களே இந்த மாதம் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் காரிய தடை தாமதம் ஏற்படலாம். உஷ்ண சம்பந்தமான நோய் ஏற்படுத்தும். எதிர்பாலினத்தாருடன் பழகும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். பார்ட்னர்களுடன் சேர்ந்து தொழில் செய்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. கடன் தொல்லை தலை தூக்கலாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர் களுக்கு கூடுதல் பணிச் சுமை, இடமாற்றம், அலைச்சல் போன்றவை இருக்கக்கூடும். தடைபட் டிருந்த பணம் கைக்கு வந்து சேரும். குடும்பத்தில் அமைதி நிலவ குடும்ப உறுப்பினர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனை விக்கு இடையே மன வருத்தம் உண்டாகலாம். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவது நல்லது. நினைத்த காரியத்தை நினைத்தபடி நடத்தி முடிக்க முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

**வணங்க வேண்டிய தெய்வம்: ஆஞ்சநேயர்**
**ஸ்லோகம்: அனுமன் சாலிசா சொல்லுதல்**
**பரிகாரம்: அனுமனுக்கு வெண்ணெய் சாற்றுதல்**
**சந்த்ராஷ்டமம்: பங்குனி 15–ம் தேதி 29/03/26 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.06 மணி முதல் 17 (31/03/26) செவ்வாய் இரவு 10.04 மணி வரை.**

**கும்ப ராசி அன்பர்களே!**




வீண் மனக்கவலை நீங்கும். வாகனங்களில் செல்லும்போது கவனம் அவசியம். நண்பர்கள் மூலம் கிடைக்க வேண்டிய உதவிகள் தாமதப்படும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. பொருட்களை வாடிக்கை யாளர்களுக்கு அனுப்பும்போது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்குவர தாமதம் ஆகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலையும், வேலைப் பளுவையும் சந்திக்க நேரிடும். சிலருக்கு இட மாற்றம் உண்டாகலாம். பெண்கள் அடுத்தவர்களுக்கு உதவிகள் செய்யும் போது கவனமாக இருப்பது நல்லது. அறிவுதிறன் அதிகரிக்கும். உங்களது பேச்சு மற்றவரை மயக்குவதுபோல் இருக்கும். எங்கு இருந்தாலும் ருசியான உணவை உண்டு மகிழ்வீர்கள் புதன் மனநிம்மதியை தருவார். பணவரத்து திருப்தி தரும். செயல்திறமை கூடும். பயணங்களும் செல்ல நேரிடலாம். மனதில் நிம்மதி ஏற்படும். சுற்றத்தினர் வருகை இருக்கும். மாணவர்கள் கல்வி பற்றிய கவலையை தவிர்த்து கூடுதல் கவனத்துடன் படிப்பது நல்லது. வீண் அலைச்சல் இருக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம் : பைரவர்**
**ஸ்லோகம்: பைரவர் அஷ்டகம் சொல்லுதல்**
**பரிகாரம்: பைரவருக்கு நெய் தீபம் ஏற்றி வழிபடுதல்**
**சந்த்ராஷ்டமம்: பங்குனி 17–ம் தேதி 31/03/26 செவ்வாய்க் கிழமை இரவு 10.05 மணி முதல் 20–ம் தேதி 03/04/26 வெள்ளிக் கிழமை காலை 6.31 மணி வரை.**

**மீன ராசி அன்பர்களே !**




இந்த மாதம் பணவரத்து தாராளமாக இருக்கும். கையிருப்பு கூடும். இதுவரை இருந்த தொல்லைகள் நீங்கும். நீண்ட தூரப் பயணங்களால் லாபம் உண்டாகும். மனதில் தைரியம் பிறக்கும். சுக்கிரன் சஞ்சாரம் வாக்கு வன்மையால் ஆதாயத்தை பெற்று தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபப்படாமல் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது. சகோதரர் வகையில் உதவி கிடைப்பதில் தாமதம் உண்டாகலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்கு இடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். கடன் விவகாரங் களில் கவனம் தேவை. உபதொழில் தொடர்பான காரியங்கள் தாமதமாக நடக்கும். அரசியல்துறை யினருக்கு மேலிடத்திற்கு பயந்து வேலை செய்ய வேண்டி இருக்கும். உழைப்பு அதிகரிக்கும். நண்பர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகலாம். மாணவர்கள் கூடுதலாக நேரம் ஒதுக்கி படிக்க வேண்டி இருக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: ஆஞ்சநேயர்**
**ஸ்லோகம்: துர்க்கா அஷ்டகம் சொல்லுதல்**
**பரிகாரம்: ஆஞ்சநேயருக்கு நெய் தீபம் ஏற்றுவது**
**சந்த்ராஷ்டமம்: பங்குனி 20–ம் தேதி 03/04/26 வெள்ளிக்கிழமை காலை 6.32 மணி முதல் 22–ம் தேதி 05/04/26 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.13 மணி வரை**



### அரியலூர், கீழப்பழுவூர், திருமானூர் மற்றும் வெங்கனூரில்

# காவலர்களுக்கு அரியலூர் மாவட்ட SP திரு.விஷ்வேஷ் பா.சாஸ்திரி IPS அறிவுரை

மத்திய மண்டல IG திரு.வே.பால கிருஷ்ணன் IPS அவர்களின் உத்தரவின்படி, காவல் நிலையங்களில் உள்ள காவல் ஆய்வாளர் முதல் காவலர்கள் வரை உள்ள காவல்துறையினருக்கு, ஒரு வழக்கின் விசாரணைக்கு காவல் நிலையம் அழைத்து வரும் நபர்களை காவல்துறையினர் எவ்வாறு கவனமாக பார்த்துக் கொள்வது குறித்தும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பது மற்றும் குற்றங்களை தடுப்பது குறித்தும், காவல் நிலையங்களுக்கு புகார் அளிக்க வரும் மனுதாரரிடம் அவர்களின் மனுவினை விசாரித்து உரிய நடவடிக்கை எடுப்பது மற்றும் அவர்களின் பிரச்சினையை தீர்க்க வழிகாட்டுவது குறித்தும் அறிவுரை வழங்கப்பட்டது. 13.03.2026 அன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.விஷ்வேஷ் பா.சாஸ்திரி IPS அவர்கள் அரியலூர், கீழப்பழுவூர், திருமானூர் மற்றும் வெங்கனூர் ஆகிய காவல் நிலையங்களுக்கு நேரில் சென்று காவல்துறையினருக்கு அறிவுரை வழங்கினார்கள்.

**நிருபர்: R.தங்க பாண்டியன், அரியலூர்**



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.தர்ப்பகராஜ் IAS அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் முன்னேற்றத்தை நாடும் வட்டாரம் திட்டத்தின் கீழ் பணியாற்றிய ஊரக வளர்ச்சித் துறை, மகளிர் திட்டம், மருத்துவத் துறை, கல்வித் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம், கால்நடைத்துறை மற்றும் ஆவின் போன்ற துறைகளை சார்ந்தவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் நினைவு பரிசுகளை வழங்கினார்.


**சிறப்பு நிருபர்: இரா.சக்திவேல், வேட்டவலம்**

# மானாமதுரை முத்தனேந்தலில் புகையிலை பொருட்கள் பறிமுதல்

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை காவல் நிலைய எல்கைக்கு உட்பட்ட, முத்தனேந்தல் கிராமத்தில் உள்ள சர்க்கரை அம்பலம் டீக்கடையில் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக ரகசிய தகவல் கிடைத்தது. அதன்படி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின்பேரில் தனிப்படை அமைக் கப்பட்டு சார்பு ஆய்வாளர் திரு. பாரதிராஜா தலைமை யிலான தனிப்படை காவலர்கள் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், முத்தனேந்தலில் முகமது இப்ராகிம் மகன் நைனா முகமது சக்கரை முத்தனேந்தல் என்பவரின் வீட்டில் 208 பாக்கெட்டுகள் கூல்லிப், கணேஷ் புகையிலை 300 பாக்கெட்டுகள், ஒரு செல்போன் முதலியன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட நபரும் கைப்பற்றப்பட்ட பொருட்களும் காவல் நிலையம் கொண்டு வரப்பட்டு, வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

**நிருபர்: சிவ குருநாதன், சிவகங்கை.**
















பாராட்டு சான்றிதழ் வழங்கிய

**ஆவடி காவல் ஆணையாளர்**
**திரு.பிரேம் ஆனந்த் சின்ஹா IPS அவர்கள்**

ஆவடி காவல் ஆணையாளர் திரு.பிரேம் ஆனந்த் சின்ஹா IPS அவர்கள் 75 கிலோ கஞ்சா பறிமுதல் செய்த வழக்கில் காவல் ஆளிநர்களை பாராட்டி சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்கள்.

தலைமை நிருபர்: P..பிரஸ்டன், அம்பத்தூர்

# கிட்னி முத்திரை



**சுண்டு விரலின் நுனியையும், மோதிர விரலின் நுனியையும் பெருவிரலின் அடியில் வைத்து, அந்த விரல்களின் பின்புறத்தை மெதுவாகப் பெருவிரலால் அழுத்தவும். தேவையற்ற நீர் அகன்று, உடல்சூட்டை அதிகப்படுத்தும். நெஞ்சு சளி, சிறுநீரகப் பிரச்சினை தீரும். சம்மணகாலிட்டு அமர்ந்து தினமும் 10 நிமிடம் செய்க... (இரண்டு கைகளிலும் செய்க...)**



# திருநெல்வேலி டவுன் மாநகராட்சி பெண்கள் மேல்நிலை பள்ளியில் இணையவழி குற்றங்கள்குறித்த விழிப்புணர்வு



இணையவழி குற்றங்கள் குறித்து திருநெல்வேலி மாநகர சைபர் கிரைம் காவல் துறையினர் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் அவர்கள் உத்தரவின்படி, காவல் துணை ஆணையர் காவல் ஆணையர் திரு.தேஷ்முக் சேகர் சஞ்சய் IPS மேற்பார்வையில், மாநகர பகுதிகளில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் திருநெல்வேலி டவுன் மாநகராட்சி பெண்கள் மேல்நிலை பள்ளியில் (கல்லணை பள்ளி) மாணவியர்களிடம், இணையவழி குற்றங்கள் குறித்தும், சமூக வலைதளங்களை பாதுகாப்பாக கையாள்வது குறித்தும், ஏடிஎம் கார்டு மற்றும் ஓடிபி குறித்தும், டிஜிட்டல் கைது, சமூக வலைத் தளத்தின் முலம் அறிமுகம் இல்லாத நபர்கள் தொடர்பு கொண்டால் அவர்களிடம் இருந்து எச்சரிக்கையாக இருப்பது பற்றியும், சமூக வலைதளம் மூலம் நடைபெற்றுவரும் வேலைவாய்ப்பு மோசடி பற்றியும், அனைத்து இணையவழி குற்றங்கள் மற்றும் பண மோசடி நடைபெற்றால் உடனடியாக சைபர் கிரைம் இலவச உதவி எண்:1 930 அல்லது https://cybercrime.gov.in/ புகார் அளிக்க வேண்டும் என திருநெல்வேலி மாநகர சைபர் கிரைம் காவல் துறையினர் விழிப்புணர்வு வாசகங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

நிருபர்: R.ஜோதிபாசு, திருநெல்வேலி

---

# தென்காசியில் காவல்துறையினரின் கொடிஅணிவகுப்பு



தென்காசி மாவட்டத்தில் வருகின்ற சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு மக்கள் பயமின்றி வாக்களிக்கவும், மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாகவும், இன்று (11.03.2026) தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.G.S.மாதவன் TPS அவர்களின் தலைமையில், கூடுதல் காவல் கண்காணிப் பாளர், துணை காவல் கண்காணிப்பா ளர்கள், 6 காவல் ஆய்வாளர்கள், 8 சார்பு ஆய்வாளர்கள், 40 துப்பாக்கி ஏந்திய மத்திய பாதுகாப்பு படையினர், 103 காவலர்கள் தென்காசி காசி விஸ்வநாதர் ஆலயம் முன்பு துவங்கி சுவாமி சன்னதி பஜார், மவுண்ட் ரோடு, கீழப்புலியூர், மேலப்புலியூர், கொடிமரம், பொன்னிப் பாறை தெரு, ஒப்பனை விநாயகர் கோவில்யானை பாலம் சிக்னல் வழியாக தென்காசி பழைய பேருந்து நிலையம் வரை கொடி அணிவகுப்பு நடைப்பெற்றது.

நிருபர்: P.அண்ணாமலை, தென்காசி



















# டேட்டா சென்டர் யூனிட்டை திறந்து வைத்த

## SP திரு.அபிஷேக் குப்தா IPS

திருச்சி மத்திய IG திரு.பாலகிருஷ்ணன் IPS அவர்கள் வழிகாட்டுதலின்படி, குற்றவாளிகளை அடையாளம் காணவும், கண்காணிக்கவும் உதவும் வகையில் அமைக்கப்பட்ட டேட்டா சென்டர் யூனிட்டை (DATA CENTER UNIT) கடந்த 2.3.26–ம் தேதி புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அபிஷேக் குப்தா IPS அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார்.

நிருபர்: A.K.ஷாஜஹா, புதுக்கோட்டை.





# பணியின் போது உயிரிழந்த தலைமைக் காவலர் குடும்பத்துக்கு கருணைத் தொகை

## காவல் ஆணையர் திரு.தேஷ்முக் சேகர் சஞ்சய் IPS அவர்கள் வழங்கினார்

திருநெல்வேலி மாநகர காவல்துறையில் தலைமை காவலர் தெய்வத்திரு.அச்சுதன் பணியின் போது கடந்த 8.9.2024–ம் தேதி உயிரிழந்தார். இந்நிலையில் பணியின் போது உயிரிழந்த காவல்துறையினருக்கு தமிழக காவல் துறையால் வழங்கப்படும் கருணைத் தொகை ரூ.15 லட்சத்துக்கான காசோலையை 13.03.2026–ம் தேதி திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் திரு.தேஷ்முக் சேகர் சஞ்சய் IPS அவர்கள்அச்சுதன் குடும்பத்தினரிடம் வழங்கினார்.

நிருபர்: R.ஜோதிபாசு, திருநெல்வேலி.

---

# திருவிழாவில் காணாமல் போன 6 வயது சிறுவனை கண்டுபிடித்து பெற்றோரிடம் ஒப்படைத்த காவல் துறை

மண்டைக்காடு திருவிழாவில் காணாமல் போன 6 வயது சிறுவனை கண்டுபிடித்து பெற்றோரிடம் ஒப்படைத்த கன்னியாகுமரி மாவட்ட காவல்துறையினர்.

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் R.ஸ்டாலின் IPS அவர்கள் உத்தரவில், பக்தர்களுக்கு உதவ மண்டைக்காடு பகவதி அம்மன் திருவிழாவில் May I Help You சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது.

மண்டைக்காடு திருவிழாவிற்கு குடும்பத்தினருடன் வந்திருந்த போது, வெள்ளமாடி பகுதியைச் சேர்ந்த மகேஷின் 6 வயது மகன் கூட்ட நெரிசலில் திடீரென காணாமல் போய் விட்டார்.



இதையடுத்து காவல் துறையினர் விரைவாக செயல்பட்டு சிறுவனை கண்டுபிடித்து பெற்றோரிடம் பாதுகாப்பாக ஒப்பட்டைத்தனர். சிறுவனின் பெற்றோர் காவல் துறையினருக்கு நன்றி தெரிவித்தனர்.

தலைமை நிருபர்: J.ஜெயவேல்முருகன், கன்னியாகுமரி

# வேலை விரைவில் முடியுமா?



திருவண்ணாமலை அண்ணா சாலையின் பக்க கால்வாய் கட்டும் பணி மந்த நிலையில் நடைபெற்று வருகிறது. மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இப்பகுதியில் 20 நாட்களுக்கு முன் தோண்டப்பட்ட பள்ளங்கள் மூடப்படாத நிலையில் இருப்பதால் வியாபாரிகள், பொதுமக்கள், மாணவ, மாணவியர்கள் கடும் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர். வேலை விரைவில் முடியுமா என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

**சிறப்பு நிருபர்: இரா.சக்திவேல், வேட்டவலம்.**

---

# சௌராஷ்டிரா கல்லூரியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

தேனி மாவட்ட SJ&HR (Social Justice&Human Rights) பிரிவின் சார்பில் 13.03.2026 அன்று வீரபாண்டியில் அமைந்துள்ள சௌராஷ்டிரா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.


இந்நிகழ்ச்சியில் அரசு நலத்திட்டங்கள், தீண்டாமை ஒழிப்பு, கல்வியின் முக்கியத்துவம், இணையக் குற்றங்களை தவிர்க்கும் வழிமுறைகள், சுகாதாரம் மற்றும் நல்ல ஒழுக்கம் குறித்து மாணவ–மாணவிகளுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது. மேலும் போதைப்பொருள் பயன்பாட்டின் தீமைகள் மற்றும் குழந்தை திருமணத்தைத் தடுக்கும் அவசியம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கல்லூரி நிர்வாகம், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**நிருபர்: V.வேல்முருகன், தேனி**





**செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி**
**எச்சத்திற் கேமாப்பு உடைத்து. (112)**

விளக்கம்: நீதியை உடையவனின் செல்வம் அழியாமல் அவன் வழியினருக்குப் பாதுகாப்பாக இருக்கும்.



# விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| கலர் பின் அட்டை முழு பக்கம் | - | ரூ.20,000 |
| கலர் பின் அட்டை உள் பக்கம் | - | ரூ.18,000 |
| முன் அட்டை உள் பக்கம் முழு பக்கம் | - | ரூ.18,000 |
| முன் அட்டை உள் பக்கம் அரை பக்கம் | - | ரூ.9,000 |
| மற்ற பக்கங்களின் உள்ளே முழு பக்கம் | - | ரூ.9,000 |
| மற்ற பக்கங்களின் உள்ளே அரை பக்கம் | - | ரூ.6,000 |

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில்,
மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438




மாநகர காவல் ஆணையர் முனைவர் J.லோகநாதன் IPS அவர்கள் தலைமையில்

# 100 வழக்குகளில் கைப்பற்றப்பட்ட 664 கிலோ கஞ்சா அழிப்பு

மதுரை மாநகர காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட 100 கஞ்சா வழக்குகளில் கைப்பற்றப்பட்ட 664 கிலோ கஞ்சாவை, போதைப்பொருட்கள் ஒழிப்பு குழு தலைவர் (DRUG DISPOSAL COMMITTEE) மாநகர காவல் ஆணையர் முனைவர் J.லோகநாதன், IPS, அவர்கள் தலைமையில், போதைப் பொருட்கள் ஒழிப்பு குழு உறுப்பினர்களான மதுரை மாநகர் வடக்கு மாவட்ட காவல் துணை ஆணையர் திரு. மதிவாணன், தடய அறிவியில் ஆய்வக உதவி இயக்குநர், மதுரை மாநகர காவல் கட்டுப்பாட்டு அறை உதவி ஆணையர் மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, செல்லூர், அண்ணா நகர், காவல்நிலைய ஆய்வாளர்கள் ஆகியோர்களின் முன்னிலையில், சம்பந்தப்பட்ட காவல் ஆய்வாளர்களின் அறிக்கையுடன் அனைத்து சட்ட விதிமுறைகளையும் பின்பற்றி பெறப்பட்ட நீதிமன்ற ஆணையுடன் 11.03.2026-ம் தேதி திருநெல்வேலி மாவட்டம் நாங்கு நேரியில் உள்ள ASEPTIC SYSTEMS தொழிற் சாலையில் கஞ்சா தீயிட்டு அழிக்கப்பட்டது.

சிறப்பு நிருபர்: J.பீமராஜ், மதுரை.



## திண்டுக்கல் மாவட்டத்தில் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு
## SP டாக்டர் A.பிரதீப் IPS அவர்களின் அறிவுறுத்தலின்படி 'ரூட் மார்ச்'

திண்டுக்கல் மாவட்டத்தில் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கில் மத்திய பாதுகாப்புப் படையினர்மூலம் கடந்த 13–ம் தேதி வேடசந்தூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் A.பிரதீப் IPS அவர்களின் அறிவுறுத்தலின்படி, ரூட் மார்ச் நடத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் பயிற்சி காவல் கண்காணிப்பாளர் செல்வி.நேஹா IPS அவர்கள், வேட சந்தூர் உட்கோட்ட காவல் துணைக் கண் காணிப்பாளர் திருமதி.பவித்ரா அவர்கள் மற்றும் ஆய்வாளர்கள், சார்பு ஆய்வாளர்கள், காவலர்கள் கலந்து கொண்டனர்.

பொதுமக்களுக்கு பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தவும், தேர்தல் காலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை பேணவும் இந்த ரூட் மார்ச் மேற்கொள்ளப்பட்டது. முக்கிய சாலைகள், மக்கள் கூடும் பகுதிகள் மற்றும் முக்கிய இடங்கள் வழியாக மத்திய பாதுகாப்புப் படையினர் மற்றும் காவல்துறையினர் இணைந்து அணிவகுத்து சென்றனர். இந்த நடவடிக்கை தேர்தல் அமைதியாகவும் சீராகவும் நடைபெற உறுதி செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட்டது. பொதுமக்கள் எந்தவித அச்சமும் இன்றி தங்கள் வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**சிறப்பு நிருபர்: குரு.சரவணன், திண்டுக்கல்**

---



## நாமக்கல் மாவட்டம் பெரிய மணலி
## இலுப்பிலி எலச்சிபாளையம் பகுதியில் அணிவகுப்பு

தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு 39 பட்டாலியன் மத்திய துணை ராணுவ படையினரின் அணிவகுப்பு எலச்சிபாளையம் காவல் நிலையில் காவல் ஆய்வாளர் திரு.பாலாஜி ரமணன், காவல் உதவி ஆய்வாளர் செங்கோடன் மற்றும் தனிப்பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சக்திவேல் உளவுத் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் சி.வெங்கடாசலம் மற்றும் காவலர்கள் தலைமையில் வையப்பமலை பெரிய மணலி இலுப்பிலி எலச்சிபாளையம் பகுதியில் அணிவகுப்பு நடைபெற்றது.

**நிருபர்: தேவராஜ், நாமக்கல்**

# தூக்கமின்மைக்கு தீர்வு கண்டு உடல் ஆரோக்கியம் பெற..



தூக்கமின்மைக்கு பொதுவான காரணங்கள் மன அழுத்தம் போதிய உடல் உழைப்பின்மை, பகலில் அளவுக்கு அதிகமாக தூங்குவது, செரியாமை மற்றும் பல காரணங்கள் உண்டு.

மன அழுத்தத்தை போக்க நமது முன்னோர்கள் வழங்கிய தத்துவ கருத்துக்களை வாழ்க்கை நடைமுறையில் பின்பற்றினால் வாழ்வு நலம் பெறும். எடுத்துக்காட்டாக 'கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே' 'விட விட இன்பம் தொட தொட துன்பம்' (யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்;–குறள்). கடந்த காலத்தையும் வரும் காலத்தையும் எண்ணி கவலைப்படாமல் நிகழ்காலத்தை மட்டும் சிந்தித்து செயல்படுத்துதல் எதையும் எளிமையாக கருதுதல் (Take it Easy) மற்றும் பிற கருத்துக்களை மனத்தில் பசுமரத்தாணி போல் பதித்து வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி வந்தால் மன அழுத்தத்தை தவிர்க்கலாம்.

தியானம் செய்து மன அழுத்தத்தை தவிர்க்கலாம்,போதிய உடல் உழைப்பு இல்லாதவர்கள் நாள்தோறும் காலையிலும் மாலையிலும் குளித்துவிட்டு யோகாசன பயிற்சிகள் செய்து வரலாம், அல்லது எளிய உடற்பயிற்சி நடை பயிற்சி போன்ற ஏதேனும் உடற்பயிற்சிகள் நாள்தோறும் செய்து வருதல் அவசியம்.

இரவு உணவிற்கு முன்பு பச்சை தண்ணீரில் தலை வழியாக குளித்து வரலாம். பகலில் தூங்காமல் இருந்தால் இரவில் எளிதாக தூக்கம் வரும். ஆதலால் பகலில் தூங்கும் பழக்கம் உள்ளவர்கள் அப்பழக்கத்தை தவிர்க்க வேண்டும், அல்லது பகல் உணவிற்குப் பின் சுமார் 15 முதல் 30 நிமிடங்களுக்கு மேல் தூங்கக் கூடாது.

செரியாமை நீங்க எந்த உணவையும் நன்கு மென்று நிதானமாக உண்ண வேண்டும். அசைவ உணவை தவிர்க்க வேண்டும். எளிமையான சைவ உணவு உண்ண பழக வேண்டும். தங்களுடைய உணவில் சமைத்த உணவு உண்பதற்கு முன் நிறைய பழங்கள் உண்டு, பின்னர் சமைத்த சைவ உணவு உண்ணலாம்.

ஒருவேளை அல்லது இருவேளையும் முழு இயற்கை உணவிலும், மதியம் ஒருவேளை மட்டும் சமைத்த உணவிலும் வாழ பழகுவது இன்னும் அதிக நன்மையை தரும். தூக்கம் வர தயிரோடு வெங்காயத்தை சேர்த்து சாப்பிட்டு வரலாம்.

சுரைக்காய் இலைகளை வேகவைத்து உண்டு வரலாம். இரவு படுக்கும் முன் பால் அல்லது எலுமிச்சம் பழச்சாறில் தேன் கலந்து அருந்தி வரலாம். கசகசாவை நன்கு அரைத்து பாலில் கலந்து பருகி வந்தால் நன்றாக தூக்கம் வரும்.

மருதோன்றி பூவை தலையணையின் கீழ் வைத்து படுத்து வந்தாலும் தூக்கம் வரும். யோகாசனத்தில் குறிப்பாக "சாந்தியாசனம்" செய்து வர வேண்டும். தியானமும் செய்து வந்தால் தூக்கம் வரும். இரவில் நன்கு ஆழ்ந்து தூங்கினால் தான் அன்று அலைந்து திரிந்து செய்த பணிகள் நிமித்தம் உடலில் ஏற்பட்டுள்ள களைப்பு நீங்கி உடல் உறுப்புகள் புத்துயிர் பெற்று மறுநாள் புது தெம்புடன் உழைக்க முடியும். ஆயுட்காலம் நீடிக்கும்.

தூக்கத்தின் போது அனைத்து உறுப்புகளுக்கும் போதிய ஓய்வு கிட்டி எவ்வித பழுதும், நோயும், இன்றி நீண்ட நாட்கள் உடல் உறுப்புகள் செம்மையாக இயங்க கூடிய வாய்ப்பு கிட்டும். தூக்கமின்மைக்காக தூக்க வில்லைகளான தூக்க மாத்திரைகள் ஆங்கில மருந்துகளை சாப்பிடக்கூடாது. ஏனெனில், அம்மருந்துகளில் உள்ள வேதியல் பொருட்கள் நமது உடலுக்கு நஞ்சாகி ஊள்வினைகளை விளைவிக்கும்.

இரவில் காபி, தேநீர், போன்ற ஊறு விளைவிக்கும் பானங்கள் அருந்துவதையும் தவிர்க்க வேண்டும் மனதை தெளிந்த நீர் போல் சுமைகளை நீக்கி மனதை இலகுவாக வைத்துக் கொண்டால், மன அழுத்தம் நீங்கி நன்றாக தூக்கம் வரும். நமது உடலும் மனதும் ஆரோக்கியமாக நோயின்றி வாழலாம்.

# போகர் வருகையும் கலியுக ரகசியங்களும்





கருடசித்தர்
Dr.பாலகிருஷ்ண சுவாமி
எரசை, தேனி மாவட்டம்.

நம்முடைய அகண்ட பாரத தேசம் ஒரு புனித தேசமாகும். வேதங்களும், உபநிடதங்களும், தெய்வீக புராணங்களும் தோன்றியது நம்முடைய புனித பாரத பூமியிலே தான்.

நம் பரத தர்மத்தைக் காக்க சித்தர்களும், ரிஷிகளும், முனிவர்களும் தோன்றி நம் தர்மத்தைக் காத்தனர். அவர்கள் விட்டுச் சென்றுள்ள ஆயிரக்கணக்கான ஞான ஓலைச் சுவடிகளும் வருங்கால தலைமுறைகளுக்கு இன்றும் வழிகாட்டியக இருந்து வருகின்றது. அந்த வகையில் போகர் பெருமானின் ஞான வழிகாட்டுதல் மனித குலத்தை தீமைகளில் இருந்து காக்கின்றது. தர்மத்தைக் காக்க போகர் பெருமானின் வருகையும் கலியுக ரகசியங்களையும் பார்ப்போம்.

யுகங்கள் மாறி மாறி வரும் எத்தனை யுகங்கள் என்று பார்ப்போம்.

**யுகங்கள் நான்கு காலத்தின் பெரும்பிரிவு**

1. கிருதயுகம், 2. திரேதா யுகம், 3. துவாபர யுகம், 4. கலியுகம் என்று நான்கு வகைப்படும்.

1, கிருதயுகம்: மக்கள் முழுமையாக அறநெறியில் வாழ்வார்கள் முழு பங்கும் அறநெறியில் மனிதர்கள் வாழ்வார்கள்

2. திரேதா யுகம்: நான்கில் மூன்று பகுதி அறநெறியுடனும் 1 பகுதி அறமில்லாமலும் வாழ்வார்கள்

3. துவாபர யுகம்: இரண்டு பகுதி அறநெறியுடனும் இரண்டு பகுதி அறம் இல்லாமலும் வாழ்வார்கள்

4. கலியுகம்: நான்கில் ஒரு பகுதி அறநெறியுடனும், மூன்று பகுதி அறம் இல்லாமலும் வாழ்வார்கள். இந்தக் கலியுகம்தான் மிகவும் கொடிய யுகமாக இருக்கும்.

**காலத்தின் நுண் பிரிவு:**

15 நுண் விநாடிகள்––––1 காட்டை (3.2 வினாடி

30 காட்டை –––––––– 1 கலி (96 விநாடிகள்

30 கலை––––––––1 முகூர்த்தம்(48 நிமிடங்கள்

30 முகூர்த்தம்–––––––––1 அகோரத்திரம்

15 அகோரத்திரம்––––––––1பட்சம்

2 பட்சம்––––––––1 மாதம்

6 மாதம்––––––1 அயனம்

2 அயனம்–––––––1 வருடம் (ஆண்டு)

**கல்பக் கணக்கு:**

நான்கு யுகங்கள் சேர்ந்தது 1 மகாயுகம் அல்லது (சதுர்யுகம்)

12 மகா யுகங்களைக் கொண்டது 1 மன்வந்தரம்

14 மன்வந்திரங்களைக் கொண்டது 1 கல்பம்

மொத்தம் 30 கல்பங்கள் உள்ளது இந்த கால அளவுகள் எல்லையற்றுப் போய்க் கொண்டே இருக்கும்.

**கல்பங்கள் –30**

1. வாம தேவ கல்பம், 2. சுவேதவராக கல்பம், 3. நீலலோகித கல்பம், 4. ரந்தர கல்பம், 5.ரௌரவ கல்பம், 6. தேவ கல்பம், 7. விரக கிருட்டிண கல்பம், 8. கந்தற்ப கல்பம், 9. சத்திய கல்பம், 10 ஈசான கல்பம், 11. தமம் கல்பம், 12. சாரசுவத கல்பம், 13 உதான கல்பம், 14. காருட கல்பம், 15. கௌர்ம கல்பம், 16. நரசிம்ம கல்பம், 17. சமான கல்பம், 18. ஆக்நேய கல்பம், 19. சோம கல்பம், 20. மானவ கல்பம், 21. தட்புருச கல்பம், 22. வைகுண்ட

கல்பம், 23. லெச்சுமி கல்பம், 24. சாவித்ரி கல்பம், 25. கோர கல்பம், 26. அகோர கல்பம், 27. வைராச கல்பம், 28. கௌரி கல்பம், 29. மகோத்வர கல்பம், 30. பிதிர் கல்பம்.

இப்போது நடக்கும் கல்பம் வராக கல்பம் ஆகும்.

இந்தக் கல்பங்கள் பூமிக்கு மட்டும் ஆனது அல்ல. அண்ட முழுமைக்கும் பொருந்தும். 1 கல்பத்தில் பல இலட்சம் பூமிகள் தோன்றும் பல இலட்சம் பூமிகள் மறையும். இந்த கல்பங்கள் 30–ம் முடியும் போது அண்ட ஊழிக்காலம் நடக்கும் மறுபடியும் சிவபெருமானால் பிரபஞ்ச படைப்பு துவங்கும்.

ஒவ்வொரு கலியுகத்திலும் தர்மம் அழியும் போது தர்மத்தை காத்திட அதர்மத்தை அழிக்க தெய்வ சக்தி பூமியில் இறங்கும். விஷ்ணு பெருமான் ஒவ்வொரு யுகத்திலும் தர்மத்தை காக்க அவதரிப்பார் என்று கீதையில் கூறுகின்றார்.

மக்களின் ஆன்மாவை செம்மைப்படுத்த சிவபெருமான் சித்தர்களுக்கு ஞானத்தைப் போதித்து பூமிக்கு அனுப்புவார். சித்தர்கள் ஞானத்தையும், அறவழியையும் தெய்வ பக்தியையும் மக்களுக்கு போதிப்பார்கள். அந்த வகையில் போகர் பெருமான் கலியுகத்தில் நடக்க போகும் செயல்களையும் மாற்ற போகர் மீண்டும் பூமிக்கு வருவேன் என்றும் கூறியுள்ளார்.

**திருமூலரின் குருப்பரம்பரையில் போகர்:**

திருமூலரின் குருப்பரம்பரையில் போகர் ஞானத்தைக் கற்று வந்தவர் திருமூலருடைய சீடர் காளங்கிநாதர். காளங்கிநாதருடைய சீடர் போக முனிவர்.

போக முனிவர் தன் குருவிடம் இருந்து அனைத்து கலைகளையும் கற்றுத் தெரிந்தார். பூமியில் உள்ள அனைத்து தேசங்களுக்கும் ஆகாய மார்க்கமாக பறந்து சுற்றி அங்கு இருக்கும் மக்களின் அனுபவங்களை தெரிந்து கொண்டவர் போகர். போகர் பெருமான் கிருஷ்ணருடைய பூர்வ ஜென்ம மகனாக அறியப்படுகின்றார். அனைத்து இன்பங்களையும் கண்டு தெளிந்து ஞானம் கண்டவர். அனைவருக்கும் வேற்றுமை பாராமல் கலைகளைக் கற்றுக் கொடுத்தவர் போக முனிவர். நவபாஷணத்தில் முருகன் சிலை செய்து பழனியில் ஸ்தாபித்து அனைத்து மக்களையும் வழிபடச் செய்தவர். அனைத்து உலகங்களுக்கும் உடம்போடு சென்று வந்தவர் போக முனிவர். சிவன் அருளும் விஷ்ணு அருளும் முழுமையாகப் பெற்றவர் போகர்.

**போகர் வருகை:**

போகர் அநீதியை அழித்து தர்மத்தை நிலை நாட்ட பூமிக்கு மீண்டும் வருவேன் என்று தன் சீடர்களுக்கு உபதேசம் செய்து ஜீவசமாதி அடைந்தார்.

போக முனிவர் தன் சீடர்களுக்கு கலியுகத்தில் நடக்கப் போகும் அழிவுகளையும் அறிகுறிகளையும் கூறி உள்ளார். போகர் சொன்ன கலியுக விதிகளை தொகுத்து கோரக்க சித்தர் தன்னுடைய நூலில் கூறியுள்ளார். கோரக்கர் சந்திர ரேகை என்னும் நூலில், கோரக்க சித்தர் கலியுகத்தில் நடக்கும் அநீதியையும் இனி நடக்கப் போவதையும் யார்? யார்? பாரதத்தை ஆளுவார்கள் என்பதைப் பற்றியும் விளக்கமாகக் கூறியுள்ளார்.

**கோரக்கரின் சீடர் வீரப்பிரம்மேந்திரர்:**

இவர் ஆந்திராவில் கடப்பா மாவட்டத்தில் வாழ்ந்தவர் கோரக்க நாதரின் சீடராவார். தன் குருவான கோரக்க நாதரிடம் கலியுகத்தில் நடக்கப் போகும் கலியுக ஞானத் தத்துவங்களைக் கற்றுக் கொண்டார். தன்னுடைய ஓலைச்சுவடியில் காலக் ஞானம் என்னும் நூலை எழுதி உள்ளார். கலியுகத்தில் நடக்க இருக்கும் தீமைகளையும் அதைத் தற்காப்பது எப்படி என்பதையும் விரிவாக எழுதி உள்ளார். அநீதி கலியுகத்தில் அழிந்து நீதி அரசாளும் என்பதையும் எழுதி உள்ளார்.

**கலியுகத்தில் நடக்கும் கொடுமைகள்:**

போகர் பெருமான் கலியுகத்தில் நடக்க இருக்கும் அநீதிகளை தன் சீடர்களுக்கு கூறி உள்ளார்.

1) இரும்பு பறக்கும், ஈயம் பறக்கும்

2) மனிதர்கள் ஆளில்லாமல் தனியே பேசி சிரித்துக் கொள்வார்கள். தாயிடம் இருந்து மகனுக்கும், மகனிடம் இருந்து தாய்க்கும் அன்பு குறைந்து போகும். சகோதர சகோதரிகளின் அன்பு குறைந்து சண்டைகளும், கொலைகளும் நடக்கும். பருவங்கள் மாறி மழை பொழியும்.

3) பருவங்கள் மாறும், மரபுகள் அழியும் மனிதன் அறிவு வளர்ச்சி அதிகமாக அவன் உடல் வளர்ச்சி குறையும்.

4) நீரிலும் ஆகாயத்திலும் விநோதங்கள் தென்படும். உணவையும் நீரையும் விற்பனை செய்வர்.

5) ஆண்கள் ஆண் என்ற உணர்வை இழப்பார்கள். பெண்கள் பெண் என்ற உணர்வை இழப்பார்கள். ஆண் ஆண்மீது காமமோகமும், பெண் பெண் மீது காம மோகமும் நடக்கும். கருமாந்திர காலம் நடக்கும். இதைச் சரி என்று சொல்வதற்கு கலியரசர்கள் அடைக்கலம் கொடுப்பார்கள். குழந்தைகள் முதியவர்கள் என்றும் பாராமல் முறையற்ற காமம் நடக்கும். ஆண் ஆணையும் பெண் பெண்ணையும் திருமணம் முடிக்கும்

கொடூரங்கள் கலியுகத்தின் உச்சத்தில் நடக்கும். இதற்கு ஆதரவு அளிக்கும் சைத்தான் கூட்டங்கள் அதிகம் உலாவித் திரிவார்கள்.

கணவன் மனைவிக்குத் துரோகம் செய்வான். மனைவி கணவருக்கு துரோகம் செய்வாள். இருவரும் தங்கள் வாழ்வில் கசந்து கொள்வார்கள். பெண்கள் அனைவரிடமும் ஆடைகளை களைவதில் ஆர்வம் கொள்வார்கள். பஞ்சமா பாதகங்களும் நடக்கும்.

பணத்திற்காக கொலைகளும், விபச்சாரமும், களவுகளும், பொய்களும், ஏமாற்றுவதும் தொடர்ந்து நடக்கும். எளியோரை வலியோர் ஏமாற்றுவார்கள்.

உலகெங்கும் விபச்சார மோக வலையில் ஆண், பெண் இருவரும் சிக்கி அழிவார்கள். கலாச்சாரத்தை சீரழிக்கும் நாத்திகர்கள் மக்களை சீரழிப்பார்கள்.

6) லிங்கத்தின் தோலுரித்து ஒரு மார்க்கம் உண்டாகும். பங்கம் பாழாகும். பாசம் நாசமாகும். சடுதியில் அழிவார்கள். இயற்கையையும் மனித குலத்தையும் அழிக்கும் சமயங்கள் வேகமாகப் பரவும்.

7) மோசடியும் நய வஞ்சகமும் நரித் தந்திரமும் வஞ்சப் புகழ்ச்சியும் சகுனியின் சூழ்ச்சியும் முழுமையாக நடக்கும். இவர்களிடம் பெண்கள் தன் கற்பையும் ஆண்கள் தன் பொருளையும் இழந்து துன்புறுவார்கள்.

8) இக்கொடிய காலங்களில் அநீதியை அழித்து நீதியை நிலை நாட்ட சித்தன் வருவான். பாரதத்தை சித்தம் ஆள்வான். சிம்ம முகத்தோடு அதர்மத்தை அழிக்கும் வன்ம முகத்தோடும் பாரதத்தை ஒரு சித்தன் ஆள்வான். நாதமுத்த நாத்தீகம் பேசுபவர்களை அழிப்பார். சடையாண்டி, மாயாண்டி முழு அருளோடு தர்மத்தை நிலை நாட்டி பாரதத்தைக் காப்பான் என்று சித்தர்கள் நூலில் போகர் பெருமான் கூறுகின்றார்.

**பூமிக்கு போகர் எப்படி வருவார்**

போகர் பெருமான் போகர் என்ற பெயரில் வரமாட்டார். போகர் பெருமான் ஆன்மீக சிந்தையோடும் தர்ம சிந்தனையோடும் யார் இருக்கின்றார்களோ அவர்கள் உடம்பில் கூடுவிட்டு கூடுபாய்ந்து கொள்வார்.

போகர் வருவேன் என்று சொன்னது, போகர் புதிதாக பிறக்க மாட்டார். அவர் ஆன்மா தர்ம சிந்தனையோடு ஆளும் தலைவரின் உடம்பில் கூடுவிட்டு கூடுபாய்ந்து கொள்வார். ஆளுமை கொண்ட தலைவரின் உடம்பில் புகுந்து கொண்டு துஷ்டர்களையும், துன்மார்க்கர்களையும், நாத்திகம் பேசித் திரிபவர்களையும் கருவறுப்பார்.

துஷ்ட தீவிரவாதிகளையும் அழித்து பூமியை அமைதியாக சாந்தப்படுத்துவார். சடையாண்டியின் புகழும், மாயாண்டியின் புகழும் ஓங்கி உலகெலாம் பரவும். அனைத்து உயிர்களும் இன்பமாக வாழும்.

**கல்கி அவதாரம் எப்படி வருவார்**

கல்கி என்ற உருவத்தில் விஷ்ணு பகவான் பூமியில் எப்போதும் வரமாட்டார். அதர்மத்தை அழித்து தர்மத்தை காப்பவர் எல்லாம் கல்கி அவதாரமே. கல்கி குதிரை மீது வாளோடு வருவார் என்பது ஒரு உவமையே. குதிரை என்பது வேகத்தைக் குறிக்கும் வாள் என்பது வீரத்தைக் குறிக்கும்.

தர்மத்தைக் காக்க வேகமான வீரத்தோடு அதர்மத்தை அழிப்பவர் அனைவரும் கல்கி அவதாரமே. அவர்கள் எந்த குலமாகவும் இருக்கலாம், எந்த குடியாகவும் இருக்கலாம்.

கலியுகத்தில் அதர்மத்தை அழிக்க அனைத்து குலத்தில் இருந்து அனைத்து குடிகளில் இருந்தும் பல கல்கி வீரர்கள் தோன்றி நாத்திகத்தின் நாவை அறுப்பார்கள். தென்தமிழ் தேசத்திலேதான் அநீதியும், அக்கிரமும் முழுமையாக குடிகொள்ளும்.

இக்காலத்தில் பாரதப் போர் துவங்கி விட்டது. அனைவரும் பூமியில் பிறந்து விட்டனர். பூமியில் சகுனி படைகளும் பிறந்துவிட்டது. பஞ்ச பாண்டவர்கள் படைகளும் பிறந்து விட்டது. பாரதப் போர் ஆரம்பித்து விட்டது. மகாபாரதத்தில் பிறந்தவர்கள் அனைவரும் பூமியில் பிறந்து விட்டனர். இனி பூமியில் வருவவதற்கு யாருமில்லை. பாரதப் போர் துவங்கி நடந்து கொண்டு இருக்கின்றது. துரியோதனன் படைகளும் பஞ்ச பாண்டவர் படைகளும் சூட்சமப் போரை துவங்கி விட்டன.

கிருஷ்ண பரமாத்மா போரை சூட்சமமாக நடத்திக் கொண்டு இருக்கின்றார். அதர்மம் அழிந்து தர்மம் வெற்றி கொள்ளும். கெட்ட சூழ்ச்சியும், நரித்தந்திரமும் சகுனி வியூகமும் தென் தமிழ் தேசத்தில் இருந்து அப்புறப்படுத்தப்படும். தர்மமும் நீதியும் வெல்லும். அனைத்து எளிய உயிர்களும் பாதுகாக்கப்படும். மரம், செடி முதல் கொண்டு இயற்கையும் உயிர் பெறும்.

**பகவத் கீதை**

யதா யதா ஹிதர்மஸ்ய ; க்லானிர்பவதி பாரத

அப்யுத்தானமதர் மஸ்ய ; ததாத்மானம் ஸ்ருஜாம்யகம்

பரித்ராணாயா ஸாதூனாம் ; விநாஷாய ச துஷ்க்ருதாம்

தர்ம சம்ஸ்தாபனார்த்தாய ; சம் பவாமி யுகே யுகே

# SECTION 144

## இந்திய தண்டனை சட்டம் IPC 144

இந்த சட்டம் என்ன குற்றத்திற்கு தண்டனை வழங்குகிறது என்றால், சட்ட விரோதமான கூட்டம் இதற்கு தான் தண்டனை வழங்குது.

இந்திய தண்டனைச் சட்டம் 141 தண்டனை பற்றி விளக்கமாக பார்ப்போம். அதாவது இந்த சட்டத்திற்கு புறம்பாக மக்களுக்கும் நாட்டிற்கும் அரசிற்க்கும் குந்தகம் விளைவிக்கும் நோக்கில் சட்ட விரோதமாக கூட்டமாக கூடி பிரச்சனை ஏற்படுத்துகிறவர்களை இந்த சட்டத்தின் அடிப்படையில் கைது செய்யலாம். சரி கூட்டம் என்றால் எப்படி விளக்க முடியுமா ஆம் முடியும் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கூடினால், அதைக் கூட்டம் என்று சட்டம் கருதுகிறது.

கூட்டத்தின் பொது நோக்கம் சட்டத்திற்கு விரோதமான செயல்கள் புரிவதாக இருந்தால், அது சட்டவிரோதமான கூட்டம் ஆகிறது. இதைப் பற்றி பிரிவு 141மேலும் தெளிவாக்குகிறது.

இந்திய தண்டனைச் சட்டம் 141 பற்றி தெரிந்துகொள்ளுங்கள்...

ஒரு கூட்டம் எப்போது சட்ட விரோதமான கூட்டம் ஆகிறது ?

பின்வரும் குற்றங்களில் ஏதேனும் ஒன்றை பொது நோக்கமாக கொண்டு ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கூடினால் அக்கூட்டம் சட்ட விரோதமான கூட்டமாகிறது.

1) மத்திய அரசு, மாநில அரசு, பாராளுமன்றம், சட்டமன்றம் பொது ஊழியர் இவர்களை குற்றமுறு வன்முறையால் தாக்கவோ, தாக்குவதற்காக அச்சிறுத்தவோ செயலுக்காக கூடுகிறக் கூட்டம்.

2) சட்டப்படியான உத்தரவுகளை அல்லது நடவடிக்கைகளை நிறைவேற்ற விடாமல் எதிர்க்கும் கூட்டம்.


3) அழிம்பு சொத்தழிப்பு அல்லது குற்றமுறு அத்துமீறல் அல்லது வேறு குற்றங்களைச் செய்யும் கூட்டம்.

4) குற்றமுறு வன்முறையால் தாக்கியோ, தாக்கப் போவதாக அச்சுறுத்தியோ, ஒருவரின் உடமையை கைப்பற்றினாலோ அல்லது மற்றவர்களின் சுவாதீன அனுபவத்தை பறித்தாலோ, அல்லது அவற்றின் தங்களின் உரிமைகளை நிலைநாட்டவோ செய்தல்.

5) குற்றமுறு வன்முறையால் தாக்கியோ, தாக்கப் போவதாக காட்டியோ, சட்டப்படியான கடமைகளை ஒருவர் செய்வதை தடுத்தல், அல்லது அவர் சட்டப்படி செய்யவேண்டாததைச் செய்யும்படி வற்புறுத்தல்.

இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 141 தண்டனை விபரம்.

இப்படி இது போன்ற அனைத்து குற்றங்களும் இந்திய தண்டனை பிரிவி–143–ன்படி தண்டனை வழங்கபடும் ஒரு சட்டவிரோதமான கூட்டத்தில் உறுப்பினராக இருக்கும் எவரொருவருக்கும் ஆறு மாதம் வரை சிறைக் காவலோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.




## போலீஸ் பார்வை 10-ம் ஆண்டு வெற்றி விழா

# கலந்து கொண்டு சிறப்பித்த நல் உள்ளங்கள் அனைவருக்கும் நன்றி! நன்றி!! நன்றி!!!



போலீஸ் பார்வை இதழின் 10ம்– ஆண்டு வெற்றி விழா சென்னை அரும்பாக்கத்தில் உள்ள விஜய் பார்க் ஹோட்டலில் கடந்த மார்ச் 8–ம் தேதி நடைபெற்றது. நமது குழுமத்தை சேர்ந்த குடும்பத்தினர் முயற்சியால் விழா சிறப்புற நடைபெற்றது. விழாத் துளிகளை இங்கே சிறிதாக பதிவு செய்துள்ளோம். பல்வேறு சிரமங்களுக்கு இடையேயும் விழாவுக்கு வந்திருந்து சிறப்பு செய்த அனைவருக்கும் போலீஸ் பார்வை இதழ் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

- ஆசிரியர். டாக்டர்.என்.பாலகிருஷ்ணன்









































Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**


POLICE PARVAI
மாத இதழ்


POLICE PARVAI





VIGIL & VALOUR




POLICE PARVAI











POLICE PARVAI
POLICE PARVAI
Annual Day
SEVAI CHEMMAL
M.Mariappan



Posted at - patrikachannel Egmore  Date of publication Everymonth 1st week.
POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520


































4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542

TO